1973 நவம்பர் 24]

வேலூர்—ஆர்க்காடு புறச்சாலே

***367 விஞ—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர்-ஆர்க்காடு சாலேயில் மேல்விஷாரம் அருகே அமைக்கப்பட்டு வரும் பை-பாஸ் ரோட் வேலே பூர்த்தியாகிவிட்டதா ?

(இ) இல்லே எனில், எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லே.

(இ) நடப்பு ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் முடிவடையும்.

காவல்கிணறு-கன்னியாகுமரி சாலே

*** 368 விஞ—திரு. வீ. கார்த்திசன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரிக்குப் போகும் வழியிலுள்ள காவல்கிணறு-குமரி ரோட்டில் காற்று காலங்களில் windy season ! மண், ரோட்டை மூடுவதை தவிர்ப்பதற்கான செயற்குறிப்பு, ஏதேனும் அரசு பரிசிலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லே.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி-காவல்கிணறு ரோட்டில் அடிக்கடி காற்றிஞல் ஏராளமாக மணல் கொண்டு வரப்பட்டு ரோடு மூடப்பட்டுவிடுகிறது. ஆகவே, அங்கே வாகனங்கள் செல்வதற்குக் கூட அடிக்கடி தடஸ்தம் ஏற்படுகிறது. ஆகவே, காற்றின் வேகத்தைத் தடுப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடு செய்தால் தான் இதனே மாற்ற இயலும். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1973 நவம்பர் 24

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காற்றுக் காலங்களில் மண் வந்து மூடுவதைத் தடுக்க முடியாது. கத்தாழை, கொழுஞ்சி போன்ற செடிகளை நட்டு காற்று மண் வந்து பாதையை மூடாமல் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஏதேனும் பாதை மூடப்படுமானல் 'கிரேடர் டோஸர்' வைத்து மணலை அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

ஆரணியாற்றின் குறுக்கே பாலம்

*** 369 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் அருகில் ஆரணி யாற்றின் குறுக்கே நெடுஞ்சாலையில் அமைக்கப்படும் மேல்நிலைப் பாலத்தின் பணி தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அத்தகைய திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : முன்பு பொறுப்பேற்றுக்கொண்டிருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதை நேரடியாகப் பார்த்து ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். திருப்பதி நெடுஞ்சாலையில் தரைப்பாலத்தில் ஆரணியாற்றில் வெள்ளம் வந்தால் பாதையில் நெருக்கடி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இதை விரைந்து ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு நிதி நிலைமை சரியாக ஆகும் பொழுது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாநெல்லூர் ஏரிக்கருகே அணை

*** 370 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சாணுபுத்தூரில், மாநெல்லூர் ஏரிக் கழிவுநீர் ஓடையின் குறுக்கே அமையும் அணைக்கட்டுத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?